இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் (த) - தரம் 6

பிரயோக தொழினுட்பவியல்

# இரத்தினக்கற்களும் ஆபரணங்களும்

## இரத்தின தங்கநகைக்கலை

## தரம் 6

தொழினுட்பக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

# பிரயோக தொழினுட்பவியல்

# இரத்தினக்கற்களும் ஆபரணங்களும்

## இரத்தின தங்கநகைக்கலை

## தரம் 6

தொழினுட்பக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் - தரம் 6

மொடியூல் : இரத்தின தங்கநகைக்கலை

முதற் பதிப்பு - 2025

© தேசிய கல்வி நிறுவகம்

முழுப் பதிப்புரிமையுடையது.

வெளியீடு : தேசிய கல்வி நிறுவகம்

**ISBN -**

தொழினுட்பக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.ac.lk**

இந்நூல் கல்வி அமைச்சினால்
இல. 35/3, கேரகல வீதி, கந்துபொட, தெல்கொடையில்
அமைந்துள்ள சென்வின் தனியார் நிறுவனத்தில்
அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

Printed by : Sanvin (Pvt) Ltd.
No. 35/3, Keragala Road, Kanduboda, Delgoda.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைப் பொதுக் கல்வியின் காத்திரமான மறுசீரமைப்பு முயற்சியானது கற்போர் ஒவ்வொருவரினதும் தேவைகளைத் பூர்த்தி செய்வதற்காக தீர்க்கமான ஒரு பாதையை இலக்காகக் கொண்டுள்ளது.

தேர்ச்சிகள் சார்ந்த கற்றல் பகுத்தறிவுச் சிந்தனை, ஆக்கத்திறன், 21 ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தொழினுட்ப முனைப்பு, விழுமிய பிரஜைத்துவம் போன்ற பல துறைகளை வலியுறுத்தத்தக்க வகையில் கலைத்திட்டம் கற்றல் - கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு நடைமுறைகள் போன்றவற்றின் நவீனமயமாக்கம், இந்த கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் அடிப்படையாக அமைந்துள்ளது.

கல்வியியலாளர்கள், பாடத்துறைச் சிறப்பறிஞர்கள், ஆசிரியர்கள் உட்பட பல்வேறு தரப்பினர்களுடன் உடனுழைப்பு சார்ந்த உரையாடல்களின் ஊடாக, தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டில் தரம் 1 இலும் தரம் 6 இலும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் கலைத்திட்டங்களினதும் உரிய கற்கைக் சாதனங்களினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசேட கரிசனையுடன் செயற்பட்ட பிரதமர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும் போன்றோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. மேலும், இப்பணியின் போது விசேட கரிசனையுடன் செயற்பட்ட, தேசிய கல்வி நிறுவக தாபனப் பேரவை, கல்விசார் அலுவல்கள் சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பை நன்றியுடனும் கௌரவத்துடனும் நினைவு கூர்கின்றேன்.

இப்பணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறுவகப் பணியணியினர் அனைவருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாகும் என்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

**பேராசிரியர் மஞ்சுளா வித்தானபதிரண.**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

மாறிவரும் உலகில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன் களை வழங்குவதே இந்த புதிய கலைத்திட்டத்தின் நோக்கமாகும் அவ்வாறே காலத்திற்குக் காலம் மாற்றமடையும் உலகிற்குப் பொருத்தமான திறன்களை வளர்த்து பேண்தகு அபிவிருத்திக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணப்படும் உள்ளார்ந்த திறன்களை மேம்படுத்துவதற்கு சமகால கலைத்திட்டத்தில் புதுப்பித்தல்களையும் மேற்கொள்வதன் மூலமும் புதிய பாடங் களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை சம காலத்திற்கு ஏற்றவாறு இற்றைப்படுத்துவதற்கு இது உதவும் 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் இந்தப் புதிய கலைத்திட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் என மொடியூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் 2026 ஆம் ஆண்டில் தரம் 01, 06 ஆகிய வகுப்புகளிலும் 2027 இல் தரம் 02, 07 ஆகிய வகுப்புகளிலும் 2028 இல் தரம் 03, 08 ஆகிய வகுப்புகளிலும் 2029 இல் தரம் 04, 09 ஆகிய வகுப்புக்களிலும் 2030 இல் தரம் 05 இலும் புதிய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான மொடியூல்கள் மாணவர்களுக்கேற்ற புதிய கற்றல் முறைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளதுடன், ஆசிரியர்கள் இதிலுள்ள செயற்பாடுகளை மேற் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவார். அத்துடன் இந்த மொடியூல்கள் மூலமாக சுயகற்றலுக்குத் தேவையான சூழலும் உருவாக்கப்படும். இவற்றின் மூலமாக பாடவிடயங்கள் பற்றிய அறிவைப் பெறுவதோடு அவ்வாறு பெற்ற அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம். இக்கற்றல் சந்தர்ப்பங்கள் 21ஆம் நூற்றாண்டின் திறன்களான எழுத்தறிவு (Literacy), ஆளிடைத் திறன்கள் (Interpersonal skills), விழுமியங்கள் (Values) போன்றவற்றை வலுப்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.

ஒவ்வொரு மொடியூலிலும் புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதற்குரிய வழி காட்டுதல்களோடு, மாணவர்கள் தங்கள் செயலடைவு மற்றும் மொடியூல் இலக்கு களைச் சுயமாக மதிப்பிடுவதற்குத் தேவையான மதிப்பீட்டுக் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளன. புதிய திறன்களையும் அறிவையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், மெய்யுறுதிக் கற்றலுக்குத் தேவையான வழிகாட்டுதலை இந்த மொடியூல்கள் வழங்குகின்றன.

இவ்வாறான மொடியூல்களை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டத்தை தயா ரிக்கும் பணிகளை மேற்கொண்ட, கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் பேரா சிரியர் உபாலி சேதர, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங் களான பேராசிரியர் சுனில் ஜயந்த நவரத்தின, பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஆகியோரின் அர்ப்பணிப்பான முன்னெடுப்பினை நாங்கள் மதிக்கின்றோம். மேலும், இம் மொடியூல்களைத் தயாரிப்பதில் பங்களித்த பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய வளவாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அரச மற் றும் தனியார் நிறுவனங்களின் பல்வேறு துறைசார்ந்தோரின் உயர்மட்ட சேவையினை யும் நாம் நன்றியுடன் நினைவு கூர்கிறோம். இந்த மொடியூல்களைப் பயன்படுத்தும் போது நீங்கள் பெறும் அனுபவங்கள் ஆலோசனைகள் பற்றிய பின்னூட்டல்கள் எங்களுக்கு மிகவும் அவசியமானவை. எனவே, எதிர்கால மொடியூல் மேம்பாட்டிற்காக உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திரு.கே. ரஞ்சித் பத்மசிரி
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
விஞ்ஞான தொழினுட்ப பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை.

## வழிகாட்டல், எழுத்தாக்கம், தொகுப்பாக்கம்

**வழிகாட்டல்** : பேராசிரியர் மஞ்சுளா வித்தான பத்திரன (கலாநிதி)
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

திரு. கே.ஆர். பத்மசிரி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்

**மேற்பார்வை** : கலாநிதி. திரு. கே. ஜீ. வசந்த கட்டுக்குருந்த
பணிப்பாளர், தொழினுட்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

**ஒருங்கிணைப்பு** : திருமதி. ஜீ.கே. கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர்.
தொழினுட்பப் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு** : திரு. கே. இசுரங்க தயாரத்ன, உதவிப் பணிப்பாளர் -இரத்தினவியல் (பதில் கடமை) மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

திரு. பீ.என்.டி.ஆர்.ஆர். தயாரத்ன, பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்),
மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

திரு. பீ.என்.டீ. கமல் பட்டகொட, பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்),
மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

திரு. எஸ்.டி. அனுர சனத் சமரவீர, பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்),
மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

கே.எம்.ஆர். சுபாஷினி கோணார, பயிற்றுவிப்பாளர் - இரத்தினவியல், பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்),மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

**தொகுப்பாளர் குழு**
**உள்வாரி** : திருமதி. ஜீ.கே. கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர்.
தொழினுட்பப் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

திருமதி. டீ.எஸ்.ஆர்.எஸ்.எஸ். குணவர்தன, உதவி விரிவுரையாளர்,
தொழினுட்பப் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

**வெளி** : திரு. என். ரீ. கே. லொக்குலியன, பணிப்பாளர் (ஓய்வுநிலை)
தொழினுட்பக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

திரு. கே. இசுரங்க தயாரத்ன, உதவிப் பணிப்பாளர் - இரத்தினவியல் (பதில் கடமை) மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

திரு. பீ.என்.டி.ஆர்.ஆர். தயாரத்ன, பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்),
மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

திரு. பீ.என்.டீ. கமல் பட்டகொட, பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்),
மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

கே.எம்.ஆர். சுபாஷினி கோணார, பயிற்றுவிப்பாளர் - இரத்தினவியல், பயிற்றுவிப்பாளர் (ஆபரணம்), மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

**மொழிபெயர்ப்பு** : திரு. எம். ஆர். எம். நவாஸ், ஆசிரிய ஆலோசகர்
(தொழினுட்பம்) வலயக் கல்விப் பணிமனை- மாத்தறை.
திரு. எம்.ஏ.எம். ஹவைஸ், ஆசிரியர், அஸ் ஸபா ம.வி. வத்தேகெதர

**மொழிச்செவ்விதாக்கம்**: திரு. எம்.எச்.ஏ.ஆர். ஜின்னா ஆசிரிய ஆலோசகர் (ஓய்வுநிலை),
தொழினுட்பவியல் மாவனல்லை கல்வி வலயம்.
திரு. எம். எஸ். எம். முனவ்வர், இலங்கை அதிபர் சேவை (ஓய்வுநிலை),
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.

**முன்பக்க வடிவமைப்பு**: திரு. ஹிரன்ய சிரிமான்ய, ஆடை வடிவமைப்பாளர்

**தட்டச்சு மற்றும்:** திரு. எம்.ஆர்.எம். பர்ஸான், வரைகலை வடிவமைப்பாளர்
**பக்க வடிவமைப்பு**

# அறிமுகம்

இருபத்தோராம் நூற்றாண்டுச் சவால்களின் எதிரே நாம் தொழினுட்பத்தில் பல கட்டங்களைக் கடந்து, ஐந்தாவது கைத்தொழில் புரட்சியை அண்மித்துள்ளோம். தொழினுட்பப் புத்தாக்கங்கள் மனிதனின் பல்வேறு தேவைகளையும் விருப்புக் களையும் நிறைவேற்ற உதவுவதோடு, நாட்டின் சமூக, பொருளாதார சூழமை வின் மீது நேரடித் தாக்கத்தையும் விளைவிக்கும். அதனடிப்படையில் சமகால, எதிர்கால தொழினுட்பச் சவால்களை எதிர்கொள்ளத்தக்க, வேலையுலகிற்கு ஏற்ற பிரஜைகளை உருவாக்குவது காலத்தின் தேவையாக உள்ளது. எனவே, மாணவரிடத்தே அறிவு, அணுகுமுறை, திறன்கள், மனப்பாங்கு ஆகியவற்றை வளர்த்தல் வேண்டும். அதனைக் கருத்திற் கொண்டு புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையில் தொழினுட்பக் கல்விக் கலைத்திட்டத்தில் மாற்றங்கள் செய் யப்பட்டுள்ளன.

கனிஷ்ட இடைநிலையில் (தரம் 6-9) கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கற்க வேண்டிய, ஒன்றிணைந்த ஒரு தொழினுட்பப் பாடமாக வாழ்க்கைக்கு தொழினுட்பம் எனும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் மாணவர்களிடத்தே அடிப்படையான தொழினுட்பத் திறன்களை விருத்தி செய்வதற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளதோடு ஆரம்ப தொழில்சார் திறன்களின் விருத்திக்காக பரந்துபட்ட கற்றல் வாய்ப்புக்கள் வழங் கப்படும். சிரேஷ்ட இடைநிலைத் (தரம் 10-11) தரங்களுக்காக, தொழினுட்பவியல், தொழிற்கல்வி ஆகிய இரண்டு பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கோளமயத் தொழிற் சந்தைக்குத் தேவையான பல்வேறு தொழினுட்பத் திறன்களை மாணவரிடத்தே விருத்தி செய்யும் சமகாலத் தேவையை இனங் கண்டு, தரம் 6 தொடக்கம் 9 வரையில் பிரயோக தொழினுட்பவியல் என்னும் பாடப் பிரிவின் கீழ் பிரதேசத்தின் வளங்களையும் கவனத்திற் கொண்டு, மேலதிக கற்றல் மொடியூல்கள் பாரிய அளவில் தொழினுட்பக் கல்வித்துறையினால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன. பிரதேசத்தின் வளங்கள், தமது ஆர்வங்களுக்கு அமைவாக இந்த மேலதிக கற்றலுக்கான மொடியூல்களை மாணவர்கள் தெரிவு செய்து கொள்ளலாம்.

மேற்படி நோக்கத்தைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட "இரத்தினக்கற்களும் ஆபரணங்களும்" பாடத்திற்கு அமைய "இரத்தின தங்கநகைக்கலை" மேலதிக கற்றலுக்கான மொடியூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இம்மொடியூல்களைத் தயாரிக்கும் பணியின் போது வளப்பங்களிப்பு மூலமும் மேலும் பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கிறேன். மேலும் இணையத்தளங்கள், பல்வேறு புத்தகங் கள், வலையொளி (YouTube) இணைப்புக்கள், QR குறியீடுகள் போன்ற உசா வுகை மூலாதாரங்களின் புலமைச் சொத்து உரிமைத்துவத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி கே.ஜீ. வசந்த கட்டுக்குருந்த**
**பணிப்பாளர்**
**தொழினுட்பக் கல்வித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்.**

# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்க இல |
|---|---|---|
| | **இரத்தின தங்கநகைக்கலை** மொடியூலின் முக்கியத்துவம் | 1 |
| 1 | இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் சார்ந்த கைத்தொழில்கள் | 2 |
| 2 | இரத்தினக்கல் கைத்தொழில் | 4 |
| 3 | இலங்கையில் இரத்தினக்கல் கிடைக்கப் பெறும் பிரதேசங்கள் | 5 |
| 4 | இலங்கையின் பொதுவான இரத்தினக்கல் வகைகள் | 6 |
| 5 | இலங்கையின் இரத்தினக்கல் சந்தை | 14 |
| 6 | ஆபரணக் கைத்தொழில் | 16 |
| 7 | இலங்கையின் ஆபரண வகை | 18 |

**இந்த மொடியூலைப் பயன்படுத்துதல்...**

2026 ம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பின் கீழ் தரம் 6 முதல் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பிரயோக தொழினுட்பவியல் பாடத்துறையானது பல் வேறு தொழினுட்பத்துறைகள் பற்றிய தேர்ச்சிகளை / திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக தமது இயலுமை மற்றும் விருப்பத்தி னடிப்படையில் தெரிவு செய்து கொள்ள முடியுமான பல மொடியூல்களைக் கொண்டதாகும். அதன் படி தரம் 06 மாணவர்களுக்கு இலங்கையிலே இரத்தினக்கல் தொழில் துறையிலே இரத்தினக்கற்களின் பெறுமதியை அதிகரித்துக் கொள்வதற்குப் பின்பற்றப்படுகின்ற இரத்தினக் கற்களுக்கான பரிகாரம் பற்றிய அறிவூட்டலைப் பெற்று அடிப்படைத் தேர்ச்சிகளை / திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு இயலுமான வாறு இரத்தின தங்கநகைக்கலை மொடியூல் அறிமுகஞ் செய்யப் பட்டுள்ளது.

இந்த மொடியூலானது ஆண்-பெண் வேறுபாடு, வயது மற்றும் வர்க்க பேதமின்றி சகல மாணவர்களும் ஆர்வத்தோடு அனுபவிக் கக்கூடியதும் மனதைக் கவரக்கூடியதுமான கற்றல் சந்தர்ப்பங்களைக் கொண்டதாகும்.

இந்த மொடியூலைக் கற்கின்றபோது, இலங்கையிலே இரத்தினக்கல் வகைகள், பயன்பாடு மற்றும் இரத்தினக் கற்கள் கிடைக்கக்கூடிய பிரதேசங்கள் பற்றியும் பண்டைய மற்றும் சம்பிரதாயபூர்வமான தங்க நகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடு பற்றிய விடயங்களைத் தேடி யாராய்வதற்கும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இந்த மொடியூலானது ஆசிரியரது வழிகாட்டலினூடாக கீழ் செயற்பாடு களைக் கற்பதற்கு, மாணவரை ஊக்குவிக்கின்றது. 2026ம் ஆண்டு கல்வி மறுசீரமைப்போடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கணிப்பீட்டு முறை பற்றியும் மாணவருக்குப் பழகுவதற்குத் தேவையான செயற்பாடுகள் சிலவும் இதில் அடங்கியுள்ளன. கணிப்பீடு செய்யும் நுட்பமுறையை நன்கு விளங்கிக்கொள்வதற்குத் தரப்பட்டுள்ள செயற்பாடுகளைச் செய்வதும் அது தொடர்பான செயலடைவை ஆசிரியரின் உதவியுடனும் தாம் அல்லது தமது நண்பர்கள் மூலமும் கணிப்பீடு செய்து கொள்வதும் மிக முக்கியமாகும்.

## இரத்தின தங்கநகைக்கலை மொடியூலின் முக்கியத்துவம்

பண்டைய காலந்தொட்டு இலங்கை இரத்தினக்கல் கைத்தொழிலில் பிரசித்தம் பெற்று விளங்கி வருகின்றது. அதன் காரணமாகவே இரத்தின தூவீபம் என்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று சிங்கள அரசர்களின் காலந்தொட்டு அரச குடும்பத்தினரும் ஏனைய உயர் குலத்தைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்திய மிகவும் விசேடமான தங்க நகைகளின் உற்பத்தியும் அதற்கான சிறப்புரிமை பெற்ற குடும்பங் களினால் சம்பிரதாயபூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்காலத்திலே வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகைக்குப் பின்னர் மாணிக்கக் கல் மற்றும் தங்க நகைகள் தொடர்பான கைத்தொழில் மேலும் நவீன மயமாக்கப்பட்டு விருத்தியடைந்துள்ளது.

இரத்தின தங்கநகைக்கலை மொடியூலைக் கற்பதன் மூலம்

- இரத்தினக்கல் மற்றும் தங்கநகைக் கைத்தொழிலின் தன்மையை நுணுகியாராய்வதற்கும்
- இலங்கையிலே இரத்தினக்கல் கிடைக்கக்கூடிய பிரதேசங்களையும் அரிதான இரத்தினக்கல் குடும்பத்தை இனங்காண்பதற்கும்
- இரத்தினக்கல் சந்தைப் பரம்பலையும், செயற்பாடுகளையும இனங் காண்பதற்கும்
- இலங்கையில் தங்கநகைக் கைத்தொழிலின் வரலாற்றையும் பரம் பலையும் இனங்காண்பதற்கும்
- பாரம்பரிய மற்றும் நவீன தங்கநகை வகைகளையும் பயன்பாட் டையும் இனங்காண்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.



# 1. இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் சார்ந்த கைத்தொழில்கள்

இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் சார்ந்த கைத்தொழில்கள், இங்கு காணப்படும் தொழில் வாய்ப்புக்கள், வியாபார வாய்ப்புக்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் சார்ந்த கைத்தொழில் மொடியூலானது தரம் 06 இல் பாடசாலைக் கலைத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனால் இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் சார்ந்த கைத்தொழில் தொடர்பான மேலதிகக் கற்றல் சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்குமான அடிப்படைகளை இம்மொடியூல் மூலம் அறிந்து கொள்ள முடியும்.



## இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள்



இரத்தினக்கல் அகழ்வு நுட்பவியலாளர்



இரத்தினக்கல் கொள்வனவாளர் / விற்பனையாளர் / ஏற்றுமதியாளர்



இரத்தினக்கல்லின் பெறுமதியை கணிப்பிடும் அதிகாரி



இரத்தினக்கல் ஆய்வுகூட நுட்பவியலாளர் / பரிசோதகர்



இரத்தினக்கல் ஆராய்ச்சி உத்தியோகத்தர்



இரத்தினக்கல் துறை கல்வியியலாளர்கள் / நிபுணர்கள்



இரத்தினக்கல் வெட்டும் நுட்பவியலாளர்



வெப்பப் பரிகார நுட்பவியலாளர் / இரத்தினக்கல் பரிகார நுட்பவியலாளர்



ஆபரண வடிவமைப்பாளர்



ஆபரண உற்பத்தியாளர்



ஆபரணங்களில் கல் பதிக்கும் நுட்பவியலாளர்



அலங்கார வடிவமைப்பாளர்

**செயற்பாடு 01**

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு இலங்கையில் காணப்படும் தொழில்வாய்ப்புக்களை விவரிக்கும் பதாகையொன்றை வடிவமைத்துச் சமர்ப்பிக்கவும்.

## 2. இரத்தினக்கல் கைத்தொழில்

பண்டையகாலத்தில் இலங்கையை அறிமுகம் செய்வதற்கு பயன் படுத்தப்பட்ட பெயர்களுள் “இரத்தின தூவீபம்” போன்ற பெயர்கள் பெரும் பிரபல்யம் அடைந்து காணப்பட்டன. இதன் விளக்கம் இலங்கை யானது இரத்தினக்கற்கள் நிறையப்பெற்றதொரு நாடு என்பதாகும். சிறிது நிறை கொண்டதாயினும் அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும் வளங்களில் முதன்மை இடத்தை வகிக்கின்ற இரத்தினக்கல் ஏற்றுமதி யானது இலங்கையின் பொருளாதார விருத்திக்குப் பெரும் பங்க ளிப்பை நல்குகின்றது என்ற விடயம் இலங்கையின் சுங்கத் திணைக்கள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.





## 3. இலங்கையில் இரத்தினக்கல் கிடைக்கப் பெறும் பிரதேசங்கள்

இலங்கையின் புவிப்பரப்பை கவனத்திற் கொள்ளும் போது அதில் 25% அளவில் இரத்தினக்கல் அதிகமாகப் பரம்பிக் காணப்படுகின்ற புவிப் பிரதேசமாக காணப்படுவதுடன் அவற்றில் இரத்தினபுரி, குருவிட்ட, பலாங்கொடை, எலாஹர, பகமூன, ஒக்கம்பிட்டிய மற்றும் மீட்டியாகொடை போன்ற பிரதேசங்கள் முதன்மை இடத்தை வகிக் கின்றன எனக் குறிப்பிடலாம்.




இலங்கையில் இரத்தினக்கல் அதிகமாகக் கிடைக்கும் பிரதேசங் கள்

- இரத்தினபுரி
- அகலவத்தை
- தெனியாய
- ஹொரனை
- மாத்தளை
- பெல்மதுளை
- அவிஸ்ஸாவலை
- எஹலியகொட
- கதிர்காமம்
- மீட்டியாகொட
- எம்பிலிபிட்டிய
- பஸ்ஸர
- எலாஹர
- குருவிட்ட

**செயற்பாடு 02**

மேலே நீங்கள் அறிந்து கொண்ட இலங்கையில் இரத்தினக்கல் அதிகமாகக் கிடைக்கின்ற பிரதேசங்களை இலங்கை புறவுருப் படத் தில் குறித்துக் காட்டுக.

## 4. இலங்கையின் பொதுவான இரத்தினக்கல் வகைகள்

இரத்தினக்கல் ஒன்றில் காணப்படுகின்ற பிரதான இயல்புகள் / பண்புகள்

- அழகு (Beauty)
- அரிதான தன்மை (Rarity)
- நீடித்த பாவனை (Durability)

இதற்கேற்ப இரத்தினக்கல் என்பது அழகு, அரிதான தன்மை, நீடித்த பாவனை கொண்டதுமான சேதன, அசேதன அல்லது செயற்கையான பொருளா கும். இவற்றை வெட்டி ஒப்பமிட்ட பின்னர் ஆபரணங்கள் மற்றும் அலங் காரப் பொருட்களாகப் பயன்படுத்தலாம்.



### அழகு (Beauty)

இரத்தினக்கல் ஒன்றின் அழகு அதற்குக் கிடைக்கும் வர்ணம் (Colour) மற்றும் தெளிவு (Clarity) போன்ற இயல்புகளில் காணப்படுகின்றது. மனதைக் கவரும் நிறம் மற்றும் தெளிவான ஒளி ஊடுருவக்கூடிய தன்மையும் கொண்ட மாணிக்கக் கற்கள் பெறுமதி கூடியனவையாகும்.



**அரிதான தன்மை (Rarity)**

அரிதான தன்மை என்பது அதனைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிரம மாகும். இரத்தினக்கல் பொதுவாகக் கிடைக்கின்ற கனிப்பொருளாகக் காணப்பட்டால் அதற்குக் கிடைக்கும் பெறுமதியும் குறைவடையும்.

**நீடித்த பாவனை (Durability)**

ஆபரணமொன்றை உற்பத்தி செய்யும்போது அதன் நீடித்த காலப் பாவனையானது ஆபரணமொன்றின் பெறுமதியை அதிகரிப்பதற்கு ஏதுவான காரணியாகும். ஆகவே அதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இரத்தினக்கல்லும் நீடித்த பாவனையுடைய கனிமமொன்றாக இருத் தல் வேண்டும்.

இலங்கையானது இரத்தினக்கல் வளங்கள் நிறையப் பெற்றதொரு நாடாகும். அவ்வளத்தை முறையான முகாமைத்துவம் மற்றும் விஞ் ஞான ஆய்வு பூர்வ அகழ்வு, விலையைத் தீர்மானித்தல், பெறுமதி சேர்ப்பதன் மூலம் வெட்டி ஒப்பமிடுதல், இரத்தினக்கல்லிற்கான பரி காரம் செய்வதுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி போன்ற காரணி கள் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் அதிக அன்னிய செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு முடியும்.

**இலங்கையில் பொதுவாகக் கிடைக்கப் பெறும் இரத்தினக்கல் வகைகள்**


இரத்தினக்கல் பல வகைகள் இலங்கையில் காணப்பட்டாலும் இம் மொடியூல் மூலம் இலங்கையில் பொதுவாகக் கிடைக்கும் 5 வகை யான இரத்தினக்கற்கள் பற்றி மாத்திரம் முன்வைக்கப்படுகின்றது.

- குருந்தம் (Corundum)
- கணகம் (Chrysoberyl)
- கிரிஞ்சி (Spinel)
- செம்மணிக்கல்-கார்னட் (Garnet)
- படிகம் (Quartz)

**குருந்தம் (Corundum)**

நாட்டில் இரத்தினக்கல் கிடைக்கக்கூடிய அனைத்துப் பிரதேசங்களி லும் கிடைக்கப் பெறுகின்ற இரத்தினக்கல் வகையாகும். இலங்கை யில் கிடைக்கும் மிகப் பெறுமதியான இரத்தினக்கல் வகையாக குருந்தம் இரத்தினக்கல் வகையைக் குறிப்பிடலாம். குருந்தம் வகை யில் மாணிக்கம் (Ruby) மற்றும் சபையர் (Sapphire) என இரு பிர- தான வகையுண்டு.

**மாணிக்கம் (Ruby)**



சிவப்புக்கல் எனும் மாணிக்கம் (Ruby) மற்றும் சிவப்பு ஆறு நூல் குருந்தம் வகைக்கு உரியதாகும். இதன் சிறந்த நிறம் புறா இரத்த சிவப்பு நிறமாகும்.

## சபையர் (Sapphire)

### நீல சபையர் (Blue Sapphire)






இள நீல நிறம் முதல் கடும் கரு நீல நிறம் வரை வர்ண வீச்சுக் காணப்படுகின்றன. சோளப் பூ வர்ண நீல நிறம் கொண்ட நீலக்கல் மிகச் சிறந்த நிறமுடைய சபையர் இரத்தி னக்கல்லாகக் காணப்படுகிறது.

### வெந் நீலம் (white sapphire)




நிறமற்ற மாணிக்கக் கல்லுக்கு வெந்நீலம் எனும் பெயர் பயன்படுத்தப்படுகின்றது. அநேகமாக மஞ்சள் அல்லது நீல நிறமானது சிறிதளவில் கலப்புற்ற தன்மையைக் காட்டும்.

### புஷ்பராகம் (yellow sapphire)

இள மஞ்சள் நிறம் முதல் கடும் மஞ்சள் நிறம் வரை வீச்சம் கொண்டதாகும். பொன்னிறமுடையதாகக் காணப்படின் இரத்தின புஷ்ப ராகம் என அழைக்கப்படும்.

### பத்மராஜ (padparadscha)




தாமரைப் பூவின் நிறத்தைக் கொண்ட அரிதானதும், பெறுமதியானதுமான விசேட குருந்தம் வகை யாகும்.

### இளஞ் சிவப்புக் குருந்தம் (pink sapphire)




இளஞ் சிவப்பு நிறமுடையது

**இரட்டை (மௌவ்) கல் (mauve sapphire)**

ஒரு இரத்தினக்கல்லில் இரு நிறங்களைக் காட்டும் குறுந்தக்கல் இரட்டைக்கல் எனக் குறிப்பிடப்படும்.





**நிறம் மாறும் இரத்தினம் (Colour changing sapphire)**



சூரிய ஒளியின்போது புலப்படக்கூடிய பச்சை, பச்சை மண்ணிறம், பச்சை நீலம், பச்சை மஞ்சள் நிறங்கள், மஞ்சள் நிறமான மின் குமிழ் வெளிச்சத்தில் சிவப்பு, சிவப்பு கபில நிறம், சிவப்பு மஞ்சள், சிவப்பு செம்மஞ்சள் போன்ற நிறங்களைக் கொண்ட நிறமாற்றத்தினைக் காட்டும்.

**கணகம் Chrysoberyl**



இவை மிகவும் அழகான இரத்தினக்கல் வகையொன்றாகும். இலங்கையில் இரத்தினக்கல் கிடைக்கின்ற எல்லா இடங்களிலும் இவ்வகை இரத்தினக்கல் கிடைக்கின்றது.

இவ்விரத்தினக்கற்கள் பிரதானமாக 3 வகைகள் உண்டு.

- கணகம் (Chrysoberyl)
- பச்சைக்கல் (Alexandrite)
- வைடூரியம் (Cat's eye)

## கணகம் (Chrysoberyl)

அநேகமாக இக்கல் இளம் பச்சை நிறத்திலும் கரும்பச்சை நிறத்திலும் காணப்படும். மஞ்சள், பச்சை, பச்சை-மஞ்சள் மற்றும் கபில நிறத்திலும் காணப்படும். நிறமற்ற கணகம் கிடைப்பது அரிதாகும்.





## பச்சைக்கல் (Alexandrite)



அரிதான மற்றும் அதிக பெறுமதியைக் கொண்ட பச்சைக் கல் சூரியஒளியில் காட்டுகின்ற பச்சை, பச்சைபழுப்பு (Brown), பச்சை நீலம், பச்சை மஞ்சள் ஆகியன மஞ்சள் நிற மின் குமிழ் வெளிச்சத்தில் சிவப்பு, சிவப்புகபிலம், செம்மஞ்சள் (சிவப்பு-மஞ்சள்), சிவப்புச் செம்மஞ்சள் போன்ற நிறமாற்றத்தைக் காட்டும்.

## வைடூரியம் (Cat's eye)

இக்கல்லை வளைவுள்ள கல் என இரத்தினக்கல் அகழ்வோர் குறிப்பிடுவர். ஏனெனில் இப்படிகத்தினுள் ஒரு திசையில் நிலையாக காணப்படும் நூல்போன்றதொரு உருட்டைல் எனும் கனிமப் பொருள் அமைந்து காணப்படுவதினால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது. இவ்விரத்தினக்கல் மஞ்சள், பச்சை, பச்சை செம்மஞ்சள் நிறம் ஆகிய நிறங்களில் காணப்படும்.




## கோமேதகம் (கார்னட்) Garnet

கோமேதகம் பல வகையுண்டு,

- அடர் சிவப்பு / செம்பழுப்பு - (பைரோப்) Pyrope
- செம்மாணிக்கக்கல் - (அல்மென்டைன்) Almandine
- செம்மஞ்சள் முதல் சிவப்பு வரை கோமேதகம் - (ஸ்பஸர் டைன்) Spessartine
- மஞ்சள் / தங்கம் (கிரோசியூலர்) Grossular
    - பழுப்பு மஞ்சள்/தேன் நிறம் கோமேதகம் - (ஹஸவூனைட்) Hessonite
    - பிரகாசமான பச்சை (சைவரய்ட்) Tsavorite
- கறுப்பு / பழுப்பு (அன்ட்ரடய்ட்) Andradite
    - பசுமை மின்னும் (டைமன்டொய்ட்) Demontoid

**அடர் சிவப்பு / செம்பழுப்பு (Pyrope Garnet)**


இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும்.



**செம்மணிக்கல் (Almandine)**

சிவப்பு, ஊதா - சிவப்பு, கபிலம் - சிவப்பு ஆகிய நிறங்களுடையது.





ஊதா நிறம் சார்ந்த சிவப்பு நிறம் கொண்ட பைரோப் மற்றும் செம்மணிக் கல் ஆகிய வகைக்கிடைப்பட்ட குண இயல்புகளைக் (நிறம், கடினமான தன்மையுடைய, நிறை) கொண்ட கோமேதக வகை 'ரொடோலய்ட்' (Rhodolite) என்று குறிப்பிடப்படுகின்றது.






**செம்மஞ்சள் முதல் சிவப்பு வரை கோமேதகம் (Spessartine Garnet)**



செம்மஞ்சள், கபிலம் - சிவப்பு, சிவப்பு போன்ற நிறங்களுடையது.

**மஞ்சள் / தங்கம் கீறொஸியூலர் கோமேதகம் (Grossular)**

• கோமேதகம் - ஹெசோனைட் - Hessonite - கபிலம், கபிலம் - மஞ்சள், கபிலம் - சிவப்பு போன்ற நிறங்களைக் கொண்டன.





- **பிரகாசமான பச்சை செவரைட் (Tsavorite)**

அழகிய பச்சை நிறம் கொண்டது.





**அழகிய பச்சை நிறம் கொண்டது. (Andradite)**

இவ்வகைக்குரிய டெமொன்ட் டொய்ட் Demantoid எனும் விசேட வகை கலவையானது பச்சை, மஞ்சள் - பச்சை நிறங்களில் காணப்படுகின்றது.





**படிகம் Quarts**

படிகங்கள் எனப்படுவது பல்வேறு வடிவங்களில் உலகம் பூராகவும் பரவிக் காணப்படுகின்ற விசேட கனிமமொன்றாகும். படிகங்களின் வகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- படிகம் Rock Crystals – நிறமற்ற
- செவ்வந்திக்கல் Amethyst – ஊதா
- மஞ்சள் படிக சிட்ரைன் Citrine – மஞ்சள், மஞ்சள் - கபிலம்
- புகைப் படிகம் Smoky Quartz – கபிலம்
- ரோசாப் படிகம் Rose Quartz – இளஞ்சிவப்பு
- வைடூரியப் படிகம் Quartz Cat's Eye – ஒரே திசையில் நூலொன்றைப் போன்ற ஒளிக்கோடு ஒன்று காணப்படுகின்ற படிவ வகையாகும்.
- அமெட்ரின் (Ametrine) – Amethyst + Citrine – ஒரே கல்லில் ஊதா மற்றும் மஞ்சள் நிறமுடைய இரண்டு நிறங்கள் (வர்ண வலயமுடைய) படிகமாகும்.



**செயற்பாடு 03**

நீர் விரும்பிய இருவகையான இரத்தினக்கல் வகைக்குரிய இரத்-தினக் கல் வகைகளைப் பெயரிட்டு அவற்றின் விபரங்கள் உள்ளடங் கக்கூடியவாறு பதாகையொன்றை வடிவமைத்து சமர்பிக்கவும்.

# 5. இலங்கையின் இரத்தினக்கல் சந்தை

இரத்தினக்கல் விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர்களிடையே இரத்தினக்கல் கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற இடத்தை இரத்தினக்கல் சந்தை என்று குறிப்பிடுகின்றனர்.

**பரம்பல்**

இலங்கையில் பிரபலமான இரத்தினக்கல் வர்த்தக சந்தைகள் காணப் படுகின்ற இடங்கள் சிலவற்றின் பரம்பல் பின்வருமாறு

- இரத்தினபுரி அம்பகஹயட்ட
- இரத்தினபுரி தெழுவாவத்தை
- இடங்கொட ஹெரனியாவக
- இரத்தினபுரி நிவித்திகலை

  அரச விடுமுறை தினம் தவிர்ந்த பொதுவாக கிழமையில் அனைத்து நாட்களிலும் நடைபெறும்.
- எஹலியகொட - வார நாட்கள் ஐந்திலும் நடைபெறும்.
- பேருவளை - வெள்ளிக்கிழமை தவிர்ந்த அனைத்து நாட்களிலும் நடைபெறும்
- எலஹர-பகமுன - புதன்கிழமைகளில் நடைபெறும்
- ஒக்கம்பிட்டிய - செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும்
- படல்கும்புர - சனிக்கிழமைகளில் நடைபெறும்



**இரத்தினக்கல் சந்தை செயல்முறைகள்**

இரத்தினக்கல் சந்தையொன்றில் இரத்தினக்கல் கொள்வனவு (நுகர்வு) நடைபெறும். ஆரம்ப கொள்வனவாளர்கள் அகழ்வு செய்யும் இடங்களுக்குச் (சுரங்கம்) சென்று இரத்தினக் கற்களை விலை கொடுத்து வாங்குவதுடன், சந்தைக்கு கொண்டு வந்து இரண்டாம் மூன்றாம் குழுக்களுக்கு இவை விற்பனை செய்யப்படுகின்றன. இறுதியாக சந்தையில் கைமாறுகின்ற இரத்தினக்கற்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



**செயற்பாடு 04**

இலங்கையில் இரத்தினக்கல் சந்தையில் அகழ்வு செய்யும் இடத்திலிருந்து ஏற்றுமதி செய்தல் வரையிலான செயற்பாடுகளை பரிசீலித்து அங்கு நிகழ்கின்ற செயற்பாடுகளை படங்களுடன் சிறு கையேடு ஒன்றைத் தயாரித்து சமர்பிக்கவும்.

# 6. ஆபரணக் கைத்தொழில் (Jewelry Industry)



உலகிலே பண்டைய காலம் தொட்டு நடைபெறுகின்ற ஆபரணக் கைத்தொழில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. சுற்றுலாக் கைத்தொழிலுடன் உன்னத நிலையில் ஆபரணக் கைத்தொழில் முன்னேற்றமடைந்த நாடுகளில் அத்துறை இரண்டிலும் பிறப்பாக்கம் செய்யப்படும் நேரடியாக அல்லது மறைமுகமாக தொழில் வாய்ப்புக்கள் மிக அதிகமானவையாகும்.

இலங்கையின் இரத்தினக் கற்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற ஆபரணங்கள் தற்போது கூட உலகிலே பல்வேறு நாடுகளிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக உள்ளது என்றாலும் கலைத்துவமிக்க ஆபரணங்கள் உற்பத்திக்கு உலகில் காணப்படுகின்ற கேள்விகளை நிறைவேற்றுவதற்கு பயிற்றப்பட்ட ஊழியர்களினதும் மற்றும் தொழில்வல்லுநர்களினதும் தேவைகள் நாட்டில் காணப்படுகின்றன.

## ஆபரணக் கைத்தொழிலின் வரலாறு (History of Jewelry Industry)



இலங்கையில் ஆதிகாலத்திலிருந்து விஜயன் முதல் ஸ்ரீ விக்ரமராஜ சிங்கன் வரையான காலத்தில் அரச குடும்பம் மற்றும் உயர் வம்சத்தினர் போன்றோருக்காக செப்பு, வெள்ளி மற்றும் தங்கம் போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி இராஜ ஆபரணங்கள் உற்பத்தி செய்துள்ளனர் என்பதை வரலாற்றுத் தகவல்கள் மூலம் காணக்கூடியதாக உள்ளது. பாரம்பரிய குடும்பங்களின் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப தங்கம் மற்றும் வெள்ளி சார்ந்த ஆபரணங்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற நுட்பவியலாளர்கள் விருத்தியடைந்தவுடன் பல்வேறு இராஜ ஆபரணங்கள் உற்பத்திக்கு என்றே துணைக் குடும்ப கலாச்சாரங்கள் தோற்றம் பெற்றிருந்தன.

தலைமுடியிலிருந்து விரல் நுனி வரை உடம்பின் எல்லா இடங்களிலும் அழகிற்காகப் பல்வேறு வடிவங்களைக் கொண்ட ஆபரணங்களை வடிவமைத்து அணிவது செல்வம், சமூக அந்தஸ்து மற்றும் அழகைக் காட்டுவதற்கும் பல்வேறு வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையிலும் இடம்பெற்று வந்தள்ளது.

சூழலினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பல்வேறு இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட ஆபரணங்கள் மனிதர்களின் வரையறையற்ற தேவைகளுடன் ஏற்பட்ட தொழினுட்ப மலர்ச்சியுடன் மிக விரைவில் கைத்தொழிலாக விருத்தியடைந்தன. இங்கு பல்வேறு உலோக வகைகளின் பயன்பாடு மற்றும் பல்வேறு வர்ணங்கள் ஊட்டப்பட்ட ஆபரணங்கள் முதல் அதிக விலைமிக்க இரத்தினக்கற்களின் பயன்பாடு வரை விருத்தியடைந்துள்ளது. அதற்கேற்ப ஆபரண கைத் தொழிலிற்கே உரித்தாக அமைந்துள்ள சில நுட்பமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- ஆபரண அலங்கார வடிவமைப்பு
- ஆபரண உற்பத்தித் தொழினுட்பம்
- வார்ப்பு உற்பததித் தொழினுட்பம்
- உலோக முலாம் பூசுதலும் வர்ணமூட்டலும்
- நவநாகரீக ஆபரண உற்பத்தித் தொழினுட்பம்
- உருப்பெருக்காட்டி மூலம் கற்களைப் பிடித்தல்
- கணினியை பயன்படுத்தி அலங்காரங்களை வடிவமைத்தல். (Computer Aided Design) CAD
- கணினியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல் (Computer Aided Manufacturing) CAM

## ஆபரணங்கள் பயன்பாட்டின் நோக்கம் (purpose of Jewelry)

ஆபரணங்கள் பெரும்பாலும் காலவண்ணமாக அல்லது இன்னொரு கால வண்ணத்தினைப் பூரணப்படுத்துவதற்குரிய பகுதியாகப் பயன்படுத்தும் முறை தற்போது காணக்கூடியதாக உள்ளது. பல்லாயிரம் வருடங்களாக ஆபரணங் களைப் பயன்படுத்தும் சமூகத்தின் பல்வேறு தனிப்பட்ட நம்பிக்கைகள் வழி பாடுகளின் அடிப்படையில் கெடுதல்கள், தோசங்களை அகற்றுவதற்கும் இயற் கையான அழகை எடுத்துக் காட்டுவதற்கும், பாதுகாப்பு ஞானம், அலங்காரம் மற்றும் சௌபாக்கியம் போன்ற பல்வேறு தகவல்களின் அடையாளமாக ஆபரணம் அணிவதைக் காணக்கூடியதாக உள்ளன. பெரும்பாலான பெண்கள் பெண்மையின் அடையாளமாக அல்லது சமூக அந்தஸ்தைப் பிரதி பலிக்கக்கூடிய வகையில் ஆபரணங்கள் அணிவதுடன் அதன் மூலம் பெண்களுக்கு தன்னம்பிக்கையும் அழகையும் ஏற்படுத்து வதை சமூகத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றாகும். ஆண் கள் கூட சமூக அந்தஸ்தைக் காட்டுவதற்காக ஆபரணங்கள் அணிவதை விரும்புகின்றனர்.



எவ்வாறாயினும் ஆபரணங்கள் பயன்படுத்துவதன் நோக்கம் பின்வருமாறு காட்ட முடியும்.





- இரக்கம், பாசம், நட்பு போன்ற மானிட தொடர்புகளை அடையாளப்படுத்துவதற்கு மற்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கும் (திருமணத்தின் போது மோதிரங்கள் மாற்றிக் கொள்வது, திருமண ஆண்டு ஞாபகர்த்தம் வேறு விஷேட சந்தர்ப்பங்களை ஞாபக மூட்டுவதற்கும் ஆபரணங்கள் வழங்கப்படுகின்றன.)
- பரிசுப் பொருளாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.
- உயர்தர குடும்ப பாரம்பரியங்களின் மகிமையைப் பாதுகாத்துக் கொள்ளல்
- நோக்கம் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு முக்கியமான வடிவமைக்கப்பட்ட ஆபரணங்களை அணிதல் (நம்பிக்கையும் மற்றும் வழிகாட்டிக்காக)
- மேன்மை, சக்தி, செல்வம், மகிமை அடையாளப்படுத்தல்

## 7. இலங்கையின் ஆபரண வகை (Types of Jewelry in Sri Lanka)

சம்பிரதாய ஆபரணங்கள் மற்றும் நவீன ஆபரணங்களாக இந்த மொடியூலில் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆபரணங்கள் மென்மேலும் பயன்படுத்தக் கூடிய பொருட்கள், தொழினுட்பம், இனம், பால் போன்ற பல்வேறு விடயங்களின் அடிப்படையில் வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

சம்பிரதாய ஆபரணக் கைத்தொழில் மரபுரீதியான உரிமையான தொழினுட்பம் சார் நுட்ப முறைகளுக்கு ஏற்ப அரசிற்கு, மந்திரி சபைக்கு மற்றும் ஏனைய அரச தேவைகளுக்கு ஆபரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தற்காலத்தில் கூட கலாச்சாரம், மதம் மற்றும் அரச தேவைகளுக்குச் சம்பிரதாய ஆபரண உற்பத்தி செய்யப்படுகின்ற நுட்பவியலாளர்களால் பிரதேச மட்டத்தில் உயர் தரத்திற்கு அமைவாக உற்பத்திச் செயற்பாடுகள் செய்யப்படுகின்றன. நவீன ஆபரணக் கைத்தொழிலாளர்கள் வணிகரீதியான ஆபரணங்கள், கைத்தொழில் ரீதியான நவீன தொழினுட்பக் கருவிகள் மற்றும் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி சிக்கலான வடிவைக் கொண்ட உயர் தரத்தையுடைய தரமான ஆபரணங்களை வினைத் திறனாக உற்பத்தி செய்வர். தற்கால ஆபரணங்கள் பெரும்பாலும் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற பெறுமதியான உலோக முத்து, இரத்தினக்கல் மற்றும் வைரங்களின் மூலம் அலங்கரித்து உற்பத்திச் செய்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### பாரம்பரிய ஆபரணங்கள் (Traditional Jewelry)

தற்காலத்தில் கூட பாரம்பரிய இலங்கை ஆபரணங்கள் அனேகமானவை செப்பு மற்றும் வெள்ளியினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. என்றாலும் தங்கங்களின் பிரகாசமான தன்மை மற்றும் பெறுமதி காரணமாக தங்கத்தினால் உற்பத்தி செய்யக்கூடிய பாரம்பரிய ஆபரணங்கள் விஷேட இடத்தைப் பெறுகின்றன. மலைநாட்டு நுட்பவியலாளர்களினால் வடிவமைக்கப்பட்ட இராஜாபரணம் அந்நுட்பவியலாளர்களின் ஆக்கத்திறனை சிறப்பாக வெளிக்காட்டப்படுகின்றன. பாரம்பரிய ஆபரணங்களை உற்பத்தி செய்யும் போது அரசன், அரசி, அரச அமைச்சரவை மற்றும் அரச குடும்ப அங்கத்தவர்களுக்கு வடிவமைக்கப்பட்ட ஆபரணங்களுக்காக விலைமதிக்கக் கூடிய முத்து மற்றும் இரத்தினக்கற்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாரம்பரிய ஆபரணங்களுக்கிடையில் இராஜாபரணம் எனும் “ஐம்பண்டத்” தொகுதி, மலை நாட்டுப் பாரம்பரிய பொருட்தொகுதி மற்றும் தமிழ் விவாக உற்சவங்களில் மணமகளின் ஆபரணத் தொகுதி என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

### இராஜாபரணம் (ஐம்பண்டத் தொகுதி)

இராஜாபரணமாகிய ஐம்பண்டத் தொகுதி அரசரிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஐந்து பொருட்களைக் கொண்ட தொகுதியாகும். அப்போது அரசனின் விஷேடசலுகை பெற்ற மக்களின் மூலம் ஐம்பண்டத் தொகுதி உற்பத்தி செய்யப்பட்டது.

**பங்சககுத பொருட்கள்**


- சிங்மாசனம்
- காலணி சோடி
- உன்றுகோல்/பஸ்ரம்
- உடை வாள்
- கிரீடம்



சிங்மாசனம்



காலணி சோடி



உடை வாள்



கிரீடம்



உன்றுகோல் / பஸ்ரம்

**இலங்கையின் மத, இன மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் அணி யப் படுகின்ற ஆபரணங்கள் பற்றி மேலும் கற்றறிந்து கொள்வோம்.**



- **மலைநாட்டு பாரம்பரியப் பொருட்தொகுதி**

மலைநாட்டுப் பாரம்பரியத்திற்கேற்ப மண வாழ்க்கைக்குப் புகும் பெண்கள் சேலை மற்றும் ஆபரணத்தொகுதியொ-ன்றினால் அலங்கரிக்கப்படுகின்றனர். மலைநாட்டுப் பாரம் பரியத்திற்குரிய பொருட் கூட்டம் எனப்படும். இந்த ஆபர ணத் தொகுதி பத்தினி கடவுளின் ஆபரணமாகவும் ஏழு மாலைகளின் மூலம் ஏழு பரம்பரை பிரதிநிதித்துவப் படு வதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

**மலைநாட்டு சம்பிரதாயத்துக்குரிய திருமண மாலைத் தொகுதி**

**01. அன்னச் சோடி சங்கிலி**



மலைநாட்டு மணமக்கள் அணியும் சங்கிலிகளில் பிர தான சங்கிலியாக இது கருதப்படும். விவாகம் செய்த சோடிகள் நிரந்தரமாக அணிந்திருத்தல் வேண்டும் என் பதை அடையாளப்படுத்துவதற்கு இரு அன்னச் சோடி களை ஒன்ரோடொன்று இணைத்து அதாவது இணைந்தி ருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அன்னச்சோடி சவடி மணமகளின் மார்பு மீது தாங்குவதனால் ஒரு நாளில் தயார் தாய்ப்பாலினால் குழந்தைகளைப் போசணை ஊட்டுவதைக் குறிப்பதாக நம்பப்படுகின்றது.

### 02. பதக்கம் சங்கிலி



பதக்க சங்கிலி மணமகளிற்கு தனது தகப்பன் மூலம் அணிவிக்கப்படுகின்றது. மணமகள் இவ்வளவு காலமும் தகப்பனின் கௌரவத்தைப் பாதுகாத்தது போல எதிர் காலத்தில் புருஷனின் கௌரவத்தைப் பாதுகாப்பதைக் குறிப்பதாக நம்பப்படுகின்றனர்.

### 03. மகரம் சங்கிலி



மகர சங்கிலியை அணிவதனால் நவக்கிரக தோசங்கள் மற்றும் திருஷ்டிகள் என்பன நலிவடையும் என்பதாக நம் பப்படுகின்றது.

### 04. பால் சங்கிலி



பால் சங்கிலி மணமகளின் நெஞ்சிக்குக் கீழால் அணிய வேண்டும். அவளது குழந்தைகள் தாய்ப்பாலினால் போசணை ஊட்டுவதைக் குறிப்பதாக நம்பப்படுகின்றது.

### 05. அகஸ்தி சங்கிலி



அகஸ்தி சங்கிலி மூலம் குறிக்கப்படுவது துரதிஷ்டம் அகன்று சௌபாக்கியம் உதயமாகும் என்பதாகும். மண மகளின் உடம்பில் அகஸ்தி உராய்வதால் எல்லா வகை யான கேடுகளும் அகன்று போகும் என்பதாக நம்பப்படு கின்றது.

### 06. செல்வ சங்கிலி



செல்வ சங்கிலி மணமகளின் சிறந்த சுகாதார நிலை மையை எடுத்துக் காட்டுவதாக நம்பப்படுகின்றது.

### 07. இதழ் சங்கிலி



மணப்பெண்ணின் தூய்மையை அடையாளப்படுத்துவது போன்று துன்பங்கள் அகன்று விடுவதாகவும் ஓர் நம் பிக்கை காணப்படுகின்றது.

- **துணை அணிகலன்கள் / ஆபரணங்கள்**

மணவாழ்வில் இணையும் மலைநாட்டு மணப்பெண் அணிகின்ற பிரதான ஏழு வகை கழுத்துச் சங்கிலிக்கு மேலதிகமாக அணிகின்ற மற்றும் ஆபரணங்களை துணை ஆபரணங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

**01. நெற்றிச்சுட்டி / நெற்றிப்பட்டை**

மணப்பெண்ணின் தாயினால் மணப்பெண்ணுக்கு அணிவிக்கப்படும். நெற்றிச்சுட்டி / நெற்றிப்பட்டையை அணிவிக்கின்றபோது "பிரித்" ஓதப்படும். நெற்றிப் பட்டையில் வலது பக்கம் மணமகனையும் இடது பக்கம் மண மகளையும் குறித்து நிற்கும்.





**02. சூரிய வடிவ சந்திர வடிவ ஆபரணங்கள்**

மணப்பெண் தனது தலையின் வலது பக்கத்தில் சந்திர வடிவ மற்றும் இடது பக்கத்தில் சூரிய வடிவ ஆபரணங்களையும் அணிவார். சந்திர வடிவ, சூரிய வடிவ ஆபரணம் அணிந்திருக்கும்போது பிணைப்பின் மூலம் இருவரும் பாதுகாக்கப்படுவதாகவும் மணமகளின் பத்தினித் தன்மையைக் காத்துக் கொள்ள இயலும் என்றும் நம்பப்படுகின்றது.








**03. கொண்டை ஊசி/கொண்டைப் கௌவி**

தலையின் பின்புறமாக அணியப்படும் கொண்டை ஊசி / கொண்டைப் கௌவி செல்வச் செழிப்பையும் நல்ல அதிஷ்டத்தையும் கொடுக்கும் என நம்புகின்றனர்.





**04. தோடு / ஜிமிக்கி / மட்டல்**

இது மணப்பெண்ணுக்கு செல்வச் செழிப்பைக் கொடுக்கும் என நம்புகின்றனர்.





**05. கைச் சங்கிலி (Breslet)**

மணப்பெண்ணிற்கு ஆரோக்கியமான வாழ்க்கையை வழங்கும் ஒரு அடையாளமாக கைச் சங்கிலியை நம்புகின்றனர்.





**06. ஹவடி**



மணப்பெண்ணின் இடுப்பில் அணியப்படுவதுடன் இதனால் மணமகளின் இடைவடிவம் மெரு கூட்டப் படும்.

**07. உட்கழுத்து சங்கிலி / கழுத்துச் சங்கிலி**



இது திருமண வைபவத்தின்போது சமூகமளித் திருக்கக் கூடிய உறவினர்கள், நண்பர்கள் முன்னி லையில் மணமகன் தனது துணைவிக்குக் கட்டுப் பட்ட அன்பு, கருணை, பாதுகாப்பு மற்றும் பராம ரிப்பை அடையாளப்படுத்துவதற்காக பண்டைய பண்பாடுகளுக்கு ஏற்ப மணப்பெண்ணின் கழுத்தில் அணிவிக்கின்ற ஒரு மாலையாகும்.

**செயற்பாடு 5**

மலைநாட்டு மணப்பெண்ணினால் அணியப்படும் பாரம்பரிய ஆபரணத் தொகுதி அல்லது இது போன்று பிரதேச மட்டத்தில் பயன்படுத்தப்படு கின்ற பாரம்பரிய ஆபரண வகைகளைக் கொண்ட ஆக்கபூர்வமான தொரு முன்வைப்பினைச் சமர்ப்பிக்கவும்.

**தமிழ் மணப்பெண்ணின் திருமண நகைகள்**



இலங்கையில் வாழும் இந்து சமூகத்தில் பண் டைய காலத்திலிருந்து பல்வேறு நோக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளில் பலவிதமான ஆபரண வகைகளின் பாவனை பிரபல்யமானதாகக் காணப் படுகின்றன. விஷேடமாக திருமண வைபவங்க ளின்போது இந்து மணமகளினால் அணியப்படும் ஆபரணத் தொகுதி முதன்மை இடத்தைப் பெறு கின்றது. அத்தகைய இந்துத் திருமண வைபவங் களின்போது அணியப்படும் ஆபரணத்தொகுதி யில் தென் இந்திய சாயலைக் காணலாம்.

அதன்படி தேவதையொன்றைப் போன்ற உணர்வு வெளிப்படுகின்றவாறு இந்து மணமகள் பசுமையான நகைகளினால் அலங்கரிக்கப்பட்டிருப்பார். பாரம்பரியமான காஞ்சிபுர பட்டுப் புடைவையானது மேலும் தேவதை போன்ற உணர்வை ஏற்படுத்தும். எனவே, இந்து மணமகள் அவர்களுக் கென்ற முதற்பாரம்பரியங்களை மிகவும் காலவண்ணம்மிக்கதாய் ஆக்கிக் கொள்வதில் அக்கறை கொள்வர்.

திருமண வைபவமொன்றில் மணப்பெண்ணினால் அணியப்படும் பாரம் பரிய ஆபரணங்கள்


## 1. தலை ஆபரணங்கள் - Head ornament



இந்து மணப்பெண்ணின் ஆபரணங்களில் முதன்மை ஆபரணமாகும். தலை ஆபரணங்கள் மணப்பெண் ணின் வசீகரம் மற்றும் கருணையைப் பிரதிபலிக் கும். சிக்கலான அலங்கார வடிவமைப்பொன்றான தலை ஆபரணங்களில் மாணிக்கக் கல், வைடூரியம், நீலக் கல் அல்லது முத்துக் கொத்துக்கள் போன்ற பெறுமதிமிக்க இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டு வடி வமைப்புச் செய்யப்படும்.

அது மணமகளின் வெற்றிக்கு மத்தியில் அணியப்படும். பாரம்பரிய தலை ஆபரணங்கள் மணப்பெண்களின் பிரகாசம் மற்றும் தெய்வீக ஆபரணமொன் றாகும். தலை ஆபரணமொன்றுடன் மணமகளின் தலையின் இருபக்கங்க ளிலும் சந்திர வடிவும், சூரிய வடிவும் அணியப்படுவது பாரம்பரியமாகும்.

## 2. அட்டிகை / கழுத்து சங்கிலி - Necklace



திருமண ஆபரணங்களில் கட்டாயமானதொன்றா கும். சங்கிலியானது, நிறையில் கூடியதொரு தங்க ஆபரணத் தொகுப்பாகும். பெறுமதிமிக்க (இரத் தின) கற்கள் பதிக்கப்பட்ட சேர்கா சங்கிலியொன் றைக் கொண்டதாகும். ஆரம்பத்தில் ஒரு சங்கிலி யும் பின்னர் மேலும் படைகள் பல கொண்ட சங்கிலி அடுக்குகளை உள்ளடக்கிய ஆபரணத் தொகுதிகளில் காசு சங் கிலி (காசு மாலை) பலவடிவங்களான (சதுரம், செவ்வகம், வட்டம்) சங் கிலி, நாகபட தாலி, தாமரை வடிவ சங்கிலி, மல்லிகை மொட்டு சங்கிலி, மாங்காய் வடிவ சங்கிலி போன்றன இதிலடங்கும்.

## 3. கைக்கவசம் (Armlet)



பாரம்பரிய மணப்பெண்ணொருவரின் அலங்கா ரத்தை அதிகரிப்பதற்கு மேற்கையின் நடுப்பகு தியில் அணியப்படும்.

## 4. நாக சடம் - Hair ornaments



மணப்பெண் தமது நீண்ட கூந்தலைப் பின்னிக் கட்டிக் கொள்வதற்கே விரும்புவர். மலர்கள் அல்லது விஷேடமாக வடிவமைக்கப்பட்ட தலை முடி ஆபரணங்களினால் அலங்கரிக்கப்பட்ட சாதாரண பின்னல் முறையிலான அலங்காரத் தோற்றத்தைக் கொடுக்கக்கூடிய தலை அலங் காரமாகும். பலவகை பின்னல் சாதனங்களில் தங்கம் அல்லது வைடூரியம் அடங்கிக் காணப் படும்.

## 5. மூக்குவளையம் / மூக்குத்தி - Nose Ring/ Nose Stud



இது காலத்துடன் நவீனமடைந்துள்ள பாரம்பரிய ஆபர ணங்களிலொன்றான மூக்குவளையம் / மூக்குத்தி மூக் கின் ஒரு பகுதியில் அல்லது இரு பகுதிகளிலும் அணிந்து கொள்ளும் அணிகலனாகும்.

## 6. ஒட்டியாணம் - Waist chain



இது அலங்காரத் தோற்றத்தை அளிப்பதுடன் மணப் பெண்ணின் உடையின் வடிவத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் ஒன்றாக முடிச்சு போடுவதற்கும் உதவியாய் அமையும்.

## 7. வளையல் / காப்பு - Bangles



இது ஆரோக்கியம், அதிஷ்டம் மற்றும் வளத்தை அடையாளப்படுத்துவதற்காக, திருமணத்தின் பின்னர் வளையல் / காப்பு அணிவது பாரம்பரியமாகும். பெண்ணின் அடையாளமாக கருதப்படுகின்ற வளை யலை அனைத்து மணப்பெண்களும் விரும்புவர். நிறையில் கூடிய மற்றும் வேலைப்பாடு அதிகம் கொண்ட வளையல்களைப் பயன்படுத்துவர்.

## 8. காதணி / காது சங்கிலி - Ear rings



இது கோயில் மற்றும் தெய்வச் சிலைகளின் கட்டிட வடிவமைப்புக் கலையில் ஈர்க்கப்பட்ட காதணிகள் பல் வேறு அலங்காரங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. காதணிகள் சிலவேளை நிறை கூடியதாக இருக்க லாம். சில மணப்பெண்கள் நீண்டநேர பூசையில் அமர் வதற்கு இலகுவானதாக மிகவும் அலங்காரம் மிக்க மற்றும் எளிதான வடிவமைப்புகளைத் தெரிவு செய்வார்.

### 9. மெட்டியும் காற்சலங்கையும் - Anklets Toe Rings



இவை மணப்பெண்ணின் மோதிரம் மற்றும் விரல் மோதிர ஆபரணத்தொகுதியொன்றின் மிக முக்கிய வொரு பகுதியாகும். மணப்பெண்ணின் அலங்கா ரத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு அலங்காரங் களுடன் நிறைகூடிய அல்லது எளிதான வடிவமைப் புகளைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

### 10. தாலி / மங்கள நாண் Thali

வெளிப்படுத்தும் ஒரு அங்கமாக திருமணத்தின்போது கணவன் மற்றும் மனைவிக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்ற பரிசுத்தமான பிணைப்பை அடையாளப்படுத்துவது தாலியாகும். இந்துத் திருமணமொன்றில் மிக முக்கிய நிகழ்வாகக் காணப்படுவது மணப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவதாகும். அந்நிகழ்வு அழகும், மகிமையும் வாய்ந்தது. தாலியொன் றில் நீளமான மஞ்சள் கயிறு (நூல்) மற்றும் உயர் தெய்வத்தை பிரதிநி தித்துவம் செய்கின்ற தங்கப் பதக்கம் (தொங்கல்) ஒன்று உண்டு. எவ்வா றாயினும் நவீனமான மணமகப் பெண்கள் மஞ்சள் கயிறுக்குப் பதிலாக தங்கச் சங்கிலியொன்றை அணிந்து கொள்வதற்கு விருப்பமாக உள்ளனர்.







**செயற்பாடு 6**

தமிழ் மணப்பெண்ணொருவரால் அணியப்படுகின்ற பாரம்பரிய ஆபர ணத் தொகுதியொன்றை அல்லது பிரதேசத்தில் பயன்படுத்தப்படு கின்ற தமிழ் பாரம்பரிய ஆபரண வகைகளுடன் கூடிய ஆக்கபூர்வ-மான முன்வைப்பொன்றினைச் சமர்ப்பிக்கவும்.

### நவீன ஆபரண வகைகள் (Types of Modern Jewelry )

பாரம்பரிய மற்றும் நவீன ஆபரணங்களை தெளிவாகப் பிரித்தறிவது கடின மாகும். எனினும் நவீன ஆபரண உற்பத்தியில் விருத்தியடைந்த தொழி-னுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. வேறு உலோகங்களுடன் தங்கத்தைக் கலப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வெள்ளை, மஞ்சள், சிவப்பு நிறத் தங்கம் போன்ற பெறுமதிமிக்க உலோகங்களை அதிகமாகப் பயன்படுத்தி சிக்கலான மற்றும் எளிதான மாதிரிகளில் ஆபரணங்கள் உற் பத்தி செய்யப்படுகின்றன. நவீன ஆபரணங்கள் பெறுமதிமிக்கது மட்டுமன்றி அலங்காரத்தை அதிகரிப்பதற்காக பெறுமதியான முத்து, இரத்தினம், வைடூரியம் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

## பயன்பாட்டின் அடிப்படையில் நவீன ஆபரண உற்பத்திகள் வகைப் படுத்தப் பட்டுள்ள முறை

### அட்டிகை / கழுத்து சங்கிலி (Necklace)

திருமண வைபவங்கள் மற்றும் வேறு விஷேட நிகழ்வுகளின்போது பெண்களின் அழகை இன்னும் மேம்படுத்துவதற்காக அட்டிகை அணி யப்படுகின்றது. வெள்ளி, தங்கம், பிளாட்டினம் போன்ற பல்வேறு உலோகங்களாலும் பெறுமதிமிக்க முத்து, இரத்தினம் மற்றும் வைடூ ரியம் போன்றவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.

சாதாரண கழுத்துச் சங்கிலியின் நீளம் 30 - 60 சென்றிமீற்றர் (12-24 அங்குலம்) வரையிலான அளவுகளில் பயன்படுத்தப்படுவதுடன், அநேகமான சந்தர்ப்பங்களில் வடிவமைப்புக்கேற்ப கழுத்துச் சங்கிலி யில் தாலியும் இணைக்கப்பட்டிருக்கும்.






### கழுத்தில் தொங்கும் பதக்கம் / தொங்கல் (Pendent)

பொதுவான வைபவங்களில் பதக்கம் அணிவர். பல மதங்களின் அடையா ளத்தை வெளிப்படுத்துவதற்காகவும் பதக்கம் அணியப்படுகின்றது. கழுத் தில் தொங்க விடுவதற்காக பல வடிவங்கள் கொண்ட 30 - 60 சென்றி மீற்றர் வரையிலான சங்கிலிகள் பயன்படுத்தப்படுகின்றன.









## காதணி / தோடு (Earrings)

காதணி பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருபாலாருக்கும் அணிவ-தற்காக உற்பத்தி செய்யப்படுகின்றது.



## கைச் சங்கிலி / கைக்காப்பு (Bracelet)

பெண், ஆண் ஆகிய இரு தரப்பினரும் அணிகலனாக அணிவதுடன், பெண், ஆண் தரப்பினருக்காக தனியான வடிவங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெண்களின் நளினத்தை மெருகூட்டுவதற்காக கைச் சங்கிலி அணியப்படுகிறது. ஆண் தரப்பினர் ஆளுமை விருத்தி நோக்கத்தில் கைச் சங்கிலியை அணிகின்றனர்.

### பெண்களின் கைச்சங்கிலி / கைக்காப்பு



### ஆண்களின் கைச்சங்கிலி / கைக்காப்பு



இஸ்லாம் சமயப் பெண்களின் கைச் சங்கிலி





இந்து சமயப் பெண்களின் / ஆண்களின் கைச் சங்கிலி









## வளையல் (Bangle)

விஷேட வைபவம் மற்றும் திருமண வைபவங்களில் பெண் தரப்பினர் வளையல் அணிவதுடன் முன்னைய காலத்தில் ஆண் தரப்பினரும் கை அணிகலனாக வளையலை பயன்படுத்தியுள்ளனர்.



## சேலை அலங்கார கௌவி / உடை ஊசி (Brooches)

பெண்கள் தரப்பினர் சேலையின் அலங்காரம் மற்றும் பாதுகாப்புக்காகவும் செல்வத்தன்மையைப் பிரதிபலிப்பதற்காகவும் அணியப்படும் ஆபரணமொன்றாக சேலை ஊசியைக் குறிப்பிடலாம்.



## மோதிரம் (Ring)

அன்பு, நெருக்கம், நட்பு, பெருந்தன்மை, குடும்பப் பாரம்பரியம், மேன்மை, சக்தி, செல்வத் தன்மை என்பவற்றைப் பிரதிபலிப்பதற்காகவும் விசுவாசம் மற்றும் நம்பகத்தன்மையிலும் பெண், ஆண் இருதரப்பினரும் கைவிரல்களில் மோதிரம் அணிகின்றனர்.



## கைப் பொத்தன் பதக்கை (Cufflink)

ஆண்களுக்கான விஷேடமான அணிகலன்களிலொன்றாக கமிசையின் (Shirt) கைமறைப்பை பொருத்துவதற்காக கைப் பொத்தன் பதக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.



## கழுத்து முடிச்சுத் தொங்கல் ஊசி (Tie Pin)

மேற்கத்தைய பாரம்பரியத்திற்கேற்ப அணியப்படுகின்ற கழுத்துப்பட்டியை தக்க வைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

